# ஆண்டாள் வேங்கடப் பெருமானிடம் மேகத்தை தூது அனுப்புதல்

*முனைவர் கோ.சி. கோலப்பதாஸ்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பயோனியர் குமாரசாமிக் கல்லூரி, நாகர்கோவில்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783157

**ஆய்வுச் சுருக்கம்**

*நாச்சியார் திருமொழி எட்டாம் திருமொழி விண்ணில மேலாப்பு என்பதாகும். இது மேகத்தை ஆண்டாள் கண்ணனிடம் தூது விடுவதாக அமைந்துள்ளது தமிழில் தூது இலக்கியம் விரிவாக வளர்ந்த காலம் என்பது கி.பி 14 ஆம் நூற்றாண்டு ஆகும். ஆனால் ஆண்டாளின் காலம் சற்றேர குறைய கி.பி 6 முதல் 8 ஆகும் என்கிறார்கள் ஆய்வாளர்கள் அப்படியானால் முதல், முதல் தூது இலக்கியமாக ஆண்டாளின் மேகவிடு தூதை முதல் நூலாக கொள்வதுதான் சாலப் பொருந்தும். காதலர் வாழ்வில் கனவு காண்பது என்பது ஒரு பொதுவான இயல்பு அந்த காதல் கண்ணனை அடைவதை நோக்கி செல்கிறது தலைவனை பிரிந்து வருந்தும் நிலை மிகவும் கொடியது அதனைத்தான் ஆண்டாளின் பாடலில் காண முடிகிறது. இத்திருமொழியில் ஆண்டாள் திருவேங்கடத்து பெருமானிடம் தன் காதலைத் தெரிவித்து மேகங்களை தூது விடுகிறாள். சென்ற திருமொழியில் வேங்கடவனிடம் சில கேள்வி கேட்கிறாள் ஆண்டாள் அவன் பதில் சொல்லவில்லை மழைக்க மழைக்காலம் வந்தமையால் மேகங்கள் தோன்றி முழக்கம் இட்டன பெருமாளும் தான் பிரிந்தபோது மழைக்காலத்தில் திரும்பி வருவதாக சொல்லிச் சென்றான் அக்காலம் வந்த பின்பும் அவன் வரவில்லை அவனைப் போல கருநிறம் உள்ள மேகங்களே வந்தன அவற்றைப் பார்த்து சில கேள்விகள் கேட்கிறாள் ஆண்டாள் அவையும் பதில் சொல்லவில்லை. அதனால் திருமலையில் வாழும் மேகங்களே உங்களுக்கும் அவனுக்கும் ஒரு தொடர்பு உண்டு ஆகையால் என் காதல் நிலையை நீங்கள் வேங்கடவனிடம் தூதாக சென்று அறிவிக்க வேண்டும் என்று ஆண்டாள் வேண்டுகிறாள்.*

***திறவுச்சொற்கள்:*** *நாச்சியார் திருமொழி, விண்ணீல மேலாப்பு, தூது, திருவேங்கடத்து பெருமான், ஆண்டாள், ஆழ்வார்கள், வராகஷேத்திரம், ஸ்ரீவில்லிபுத்தூர், கோதை, பெரியாழ்வார், பிரபந்தம், மேகவிடுதூது, திருமால், பத்து அவதாரங்கள், நாத முனிகள், ஹிரண்யன், உலங்குண்ட விளங்கனி, திருவநந்தாழ்வான்.*

**முன்னுரை**

*ஆழ்வார்கள் பன்னிருவர் அவர்களுள் ஒருவர் பெரியாழ்வார் இவரின் ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர் செந்தமிழ் நாட்டின் ஒரு பகுதி மல்லி நாடு ஆகும் இத்தலத்தை வடநூலர் வராகஷேத்திரம் என்று சொல்லுவர் பெரியாழ்வாரின் இயற்பெயர் விஷ்ணு சித்தர் என்பது ஆகும். திருவில்லிபுத்தூருக்கு ஓர் அணியாக விளங்கியவர் விஷ்ணு சித்தர் இவர் திருவில்லிபுத்தூர் வடபத்ரசாயிக்கு பாமாலைகளும் பூமாலைகளும் சாற்றி தொண்டு செய்பவர் இவரை பெரியாழ்வார் என்றும் வில்லிபுத்தூரார் என்றும் பட்டர்பிரான் என்றும் அழைப்பர் இத்தகைய சிறப்புமிக்க பெரியாழ்வாருக்கு ஒரு குழந்தையாக திருமகளாக தோன்றினார் பூமி தேவியாகிய மண்மகள் திருவில்லிபுத்தூரில் இறைவனுக்கு மலர் மாலை கட்டி தருவதற்காக அமைக்கப்பட்ட நந்தவனத்தில் துளசி செடிக்கு அருகில் நள ஆண்டு ஆடி மாதம் வளர்பிறையில் சதுர்த்தி திதியில் செவ்வாய்க்கிழமை என்று*

பூர நட்சத்திரத்தில் தோன்றினார் ஆண்டாள் இன்று திருவாடி பூரம் எமக்காக இன்றோ இங்காண்டாள் அவதரித்தாள் என மணவாள மாமுனிகள் திருவாக்கால் இதனை அறியலாம்

**சூடிக்கொடுத்த சுடர்கொடி**

திருமாலையே தன் கணவனாக பெற வேண்டும் வேறு மனிதர் எவரையும் மணப்பதில்லை என்ற உறுதியான கொள்கை கோதையின் மனதில் வலுப்பெறுகின்றது எனவேதான் இறைவனுக்கு இடப்பெறும் பொருள்களை கண்ணுறும் போது அவை தனக்கும் உரிமை உடையன என்ற சிந்தனை அவள் மனத்தில் எழுகின்றது ஸ்ரீவில்லிபுத்தூர் ஆலயத்தில் குடிக்கொண்டிருக்கும் எம்பெருமானுக்காக தந்தையார் தயார் செய்து வைத்திருந்த மாலை அவள் கண்ணில் பட்டது பெரியாழ்வார் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து அவர் தொடுத்து வைத்த மாலையை எடுத்து அணிந்து கொண்டு நிலை கண்ணாடியின் முன் நின்று தன் அழகை ரசித்துப் பார்த்தாள் கார்முகில் வண்ணன் ஆகிய கண்ணனுக்கு தான் ஏற்புடையவள் என்ற எண்ணம் அப்போது அவள் மனதில் தோன்றியது அகம் மகிழ்ந்து நின்ற கோதை தந்தை திரும்பி வரும் நேரம் ஆகிவிட்டதை உணர்ந்து அவசரம் அவசரமாக தான் சூடி மகிழ்ந்த பூமாலைகளைக் களைந்து பூக்கூடையில் முன் போலவே வைத்து விட்டாள் இதை அறியாத பெரியாழ்வார் மாலையை எடுத்து சென்று எம்பெருமான் கழுத்தில் அணிவித்து வழக்கம் போல் அகம் மகிழ்ந்தார் அன்று முதல் கோதை அன்றாடம் தன்னை அலங்கரித்துக் கொண்டு தந்தை இறைவனுக்கு தொடுத்து தொடுத்து வைத்திருக்கும் மாலையை அணிந்து அழகு பார்ப்பது என்பது வழக்கமாகிவிட்டது கோதையின் இவ்வழக்கம் நாள்தோறும் தொடந்தது இவ்விதமாக கோதை சூடித் தரும் மலர் மாலை நறுமணம் மிக்கு இருப்பதாகவும் மாலைகளை சூடும் எம்பெருமான் திருக்கோலம் முன்னிலும் பேரொளி பெற்று திகழ்வதாகவும் அர்ச்சகர்களும் பிறரும் கண்டு வியந்து கூறினர் அதற்கு காரணம் விஷ்ணு சித்தரின் பரம பக்தியே என்று எண்ணி அவர் மீது பெருமதிப்பு கொண்டனர் உண்மை நிலையை உணர்ந்த இறைவன் திருவுளம் கொண்டான்

ஒரு நாள் ஆழ்வார் தாம் கட்டிய மாலையில் நீண்ட தலை முடி ஒன்று இருந்ததைக் கண்டு அஞ்சி தம் மகளை வினவ அவளும் நடந்ததை மறைக்காமல் கூற அதைக் கேட்டு ஆழ்வார் பதறினர் கதறினார் பெருமானிடம் தம் பொருட்டு தம் மகள் செய்த பிழையை பொறுத்தருளும்படி வேண்டினார். அன்று எம்பெருமானுக்கு மாலை சாத்தாமலேயே இருந்து விட்டார் அன்று நள்ளிரவில் இறைவன் ஆழ்வாரது கனவில் தோன்றி ஆழ்வார் மாலை கொண்டு வராததற்கு உரிய காரணத்தை வினவ ஆழ்வார் தம் மகள் அறியாமை செயலை கூற அத்தகைய சூடிக்கொடுத்த பூமலர் தாமமின்றி பிறிதெதுவும் தமக்கு பிரியமற்றதாம் என்று பெருமான் பணித்தான் துயில் நீங்கப் பெற்ற ஆழ்வார் பெரு வியப்பும் உவப்பும் அடைந்து தமக்கு மகளாக பின்னைகொல், நிலாமாமகள், திருமகள், பிறந்திட்டாள் என்று உணர்ந்து அவள் சூடிக்கொடுத்த மாலையே பெருமானுக்கு சாத்தி வரலானார் அது முதல் சூடிக்கொடுத்தாள் என்று திருநாமம் கோதைக்கு வழங்கலாயிற்று.

**தூது இலக்கியங்கள்**

தொல்காப்பியர் தாம் இயற்றிய இலக்கண நூல் ஆகிய தொல்காப்பியத்தில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே பிரிவு ஏற்படுவதற்கு உரிய காரணங்களில் ஒன்றாகத் தூது செல்வதைக் குறிப்பிடுகின்றார். இந்தச் செய்தியைக் கூறும் தொல்காப்பிய நூற்பா

**ஓதல் பகை தூது இவை பிரிவே**

**(அகத்திணையியல். 27)**

தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே தூது செல்பவர்கள் யாவர் என்பதையும் தொல்காப்பியம் கூறுகின்றது. தோழி, தாய்,

*பார்ப்பான், பாங்கன் (தோழன்), பாணன் என்போர் தூது செல்வர் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இவை போன்று தூது பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன*

*தமிழ் மொழியில் தோன்றிய முதல் தூது நூல் நெஞ்சு விடு தூது எனும் நூல் ஆகும். இந்த நூலின் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார். அவர் தமது நெஞ்சத்தைத் தம் ஆசிரியருக்குத் தூதாக அனுப்புகிறார். இதில் சைவ சித்தாந்தக் கருத்துகள் நிரம்ப உள்ளன. இந்த நூலின் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு. தூது செல்ல ஏவப்படுகின்றவையும் பலவாறாக இருக்கின்றன. அன்னம், கிளி, மான், வண்டு போன்ற உயிரினங்கள் மட்டுமன்றி, காற்று, முகில், தமிழ் என்பனவும் தூது இலக்கியங்களிலே தூது செல்ல ஏவப்படுகின்றன.*

*கி.பி. 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய நெஞ்சுவிடு தூது என்ற நூலைத் தொடர்ந்து தமிழ் விடு தூது, அன்னம் விடு தூது, மேகம் விடு தூது, காக்கை விடு தூது, பழையது விடு தூது, மான் விடு தூது, கிள்ளை விடு தூது போன்று நூற்று ஐம்பதற்கும் மேற்பட்ட தூது நூல்கள் தோன்றியுள்ளன.திருவள்ளுவர் திருக்குறளில் தூது என்ற தலைப்பில் ஓர் அதிகாரத்தையே அமைத்துள்ளார் அந்த அதிகாரத்தில் தூதுவரின் இலக்கணம் பண்புகள் தூது சொல்லும் முறை என்பவற்றைப் பத்து குறள்களில் விளக்கியுள்ளார்*

***தொகச்சொல்லித் தூவாதநீக்கி நகச்சொல்லி***
***நன்றி பயப்பதாம்தூது (திருக்குறள் -685)***

*ஆழ்வார்கள் அனைவரும் ஆச்சாரியருள் தலைவரான நாத முனிகள் காலத்திற்கு முற்பட்டவர் என்பதும் அந்நாத முனிகள் கி.பி 823 அவதரித்தவர் என்பதும் பிரபன்னாமிருதம், கோயிலொழுகு ஆகிய நூல்களால் தெரிய வரும் செய்தியாகும் எனவே ஆழ்வார்கள் வாழ்ந்த காலம் ஐந்தாம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டுக்குள் என்பது என்று கொள்வது கால அடிப்படையில் பொருத்தம் உடையது ஆகும் ஆண்டாளின் மேகவிடுதூது முதல் தூது நூல் எனலாம். (முனைவர் நிர்மலா மோகன்-4)*

### ஆண்டாளின் மேக விடு தூது

*ஆண்டாள் கண்ணபிரானைப் பெறுவதற்காக மார்கழி மாதம் முழுவதும் நோன்பு நோற்கிறாள் கண்ணன் முகம் காட்டாததால் பிரிவு துயரில் வருந்திய அவள் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைத் தொகுத்து வெளியிடுவதாக அமைந்தது நாச்சியார் திருமொழி என்னும் பிரபந்தம் ஆண்டாளின் காதல் மிகுதியை புலப்படுத்தும் இப்ரபந்தம் 143 பாடல்களை கொண்டதாக அமைந்துள்ளது*

*பொதுவாக பெண்கள் நாணம் காரணமாக தன் காதலை நேரடியாக வெளிப்படுத்துவது கிடையாது ஆனால் ஆண்டாள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தன் காதலை எடுத்துரைப்பது பெண்விடுதலை சிந்தனையை குறிப்பதாக பார்க்கவேண்டும் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு பெண் இவ்வளவு துணிச்சலாக அகம் சார்ந்த காதல் செய்திகளை எடுத்துரைப்பது இக்காலப் பெண்களுக்கு முன்மாதிரி ஆகும். அப்படி என்றால் பெண் சமுதாயம் அந்த காலத்தில் முன்னேறி இருந்தனர் என்பதனை ஆண்டாள் பாடல் வாயிலாக அறிய முடிகிறது*

*ஆண்டாளின் மேகவிடுதூது வேங்கட மலையின் உச்சி மீது படர்ந்திருக்கும் மேகங்களைப் பார்க்கிறாள் ஆண்டாள் அம்மலை முழுவதும் படிந்து ஆகாயத்தை மறைத்து நிற்கும் மேகங்களின் அழகு அவற்றின் நிறம் எல்லாம் அவளுக்குக் கண்ணனை நினைவூட்டுகின்றன எனவே அவ்வேங்கட வனிடம் தூது செல்லுமாறு மேகத்தை வேண்டுகிறாள் நாச்சியார். (முனைவர் நிர்மலா மோகன்-96)*

### மேகங்களிடம் வேண்டுதல்

*என்னுடைய பெண்மையை உருவழிப்பது அவனுக்குப் பெருமையாகுமோ என்று திருவேங்கடமுடையானிடம் சென்று கேட்குமாறு மேகங்களிடம் சொல்லுகிறாள்.*

***விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்***
***தெண்ணீர் பாய் வேங்கடத்து என் திருமாலும் போந்தானே***
***கண்ணீர்கள் முலைக் குவட்டில் துளி சோரச் சோர்வேனை***
***பெண்ணீர்மை ஈடழிக்கும் இது தமக்கோர் பெருமையே-577***

*ஆகாசம் முழுவதிலும் நீலநிறத்தில் இருக்கும் மேற்கட்டியை விரித்துக் கட்டினாப் போலே இருக்கிற மேகங்களே தெளிந்த அருவிகள் பாயுமிடமான திருவேங்கட மலையில் நித்யவாஸம் செய்யும் என் சுவாமியான திருமாலும் உங்களோடு வந்துள்ளானோ என்னுடைய கண்ணிலிருந்து கண்ணீர் பெருகிமுலை நுனியிலே கண்ணீர் வந்து விழும்படி வருந்துகிற என்னுடைய பெருமையை உருவழிக்கிறது, அவருக்கு ஒரு பெருமையாக இருந்ததோ என்று தன் ஆற்றாமை வெளிபடுத்துகிறாள் ஆண்டாள். ஒரு பெண் தன் விரக தாபத்தை இப்படி நேரடியாக சொல்வது அகத்துறை மரபன்னு ஆனால் ஆண்டாள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் தன் காதல் நோயை வெளிக்காட்டுகிறாள்*

### காமநெருப்பு சுடுகின்றது

*தென்றலாலே நலிவுபடும் எனக்கு எம்பெருமான் ஏதாவது ஆறுதல் வார்த்தை சொல்லி அனுப்பியுள்ளானா என்று மேகங்களிடம் கேட்கிறாள்.*

***மாமுத்த நிதி சொரியும் மாமுகில்காள்! வேங்கடத்துச்***
***சாமத்தின் நிறம் கொண்ட தாடாளன் வார்த்தை என்னே!***
***காமத் தீயுள் புகுந்து கதுவப்பட்டு இடைக் கங்குல் ஏமத்தோர் தென்றலுக்கு இங்கு இலக்காய் நான் இருப்பேனே-578***

*விலை உயர்ந்த முத்துக்களையும் பொன்னையும் ஒருவர் வேண்டாமல் இருக்கும்போது வல்லன்மையால் நீங்கள் பொழிகின்றீர்களே அத்தகைய இரக்கம் குணமுடைய நீங்கள் எனக்காக எனது விரக வேதனையை திருவேங்கடத்து பெருமானிடம் எடுத்து இயம்பலாகாதா காமத்தீ என் புற உடம்பு முழுவதையும் எரித்துவிட்டு என்னுள்ளேயும் புகுந்து எரிக்க முற்பட்டு விட்டதே தென்றல் காற்றும் அக்காமத்ததீயை மிகுவித்து துன்புறுத்துகின்றது அந்தோ இனி நான் என் செய்வேன். என்று செய்வதறிவாது திகைக்கிறாள் ஆண்டாள்*

*எம்பெருமானைப் பிரிந்த துக்கத்தினால் தன் உடல் ஒளி மாறி நிறமிழந்து வளைக்கழன்று மனம் தளர்ந்து உறக்கம் ஒளிந்து பலவாறாய் சீர்குலைந்து தடுமாறி நிற்பதை என் ஆகத்து இளங் கொங்கை நாள் தோறும் வேங்கடவனின் பொன்னாகம் புல்குதற்கு விரும்புகின்றன இவ் விழைவையாவது அவரிடத்தில் போய் அறிவியுங்கள் என்கிறாள் ஆண்டாள்*

### ஆண்டாள் விருப்பம்

*பிராட்டியை முன்னிட்டுத் தன் விருப்பத்தை எம்பெருமானிடம் சொல்லு மாறு மேகங்களிடம் பிராத்திக்கிறாள்.*

***மின்னாகத்து எழுகின்ற மேகங்காள்! வேங்கடத்துத்***
***தன்னாகத் திருமங்கை தங்கிய சீர் மார்வர்க்கு***
***என்னாகத்து இளங்கொங்கை விரும்பித் தாம் நாள் தோறும்***
***பொன்னாகம் புல்குதற்கு என் புரிவுடைமை செப்புமினே-580***

*என் மார்பில் உண்டான இளங்கொங்கைகளை அவ்எம்பெருமான் விரும்பி அழகிய தம் மார்போடு அணையவேண்டும் என்பதில் எனக்கு ஆசை என்பதற்காக நாளும் எனக்கு விருப்பம் இருக்கும் படியை திருமலையிலே நித்யவாஸம் செய்யும் தனது திருமேனியில் பிராட்டி எழுந்தருளப் பெற்ற திருமார்பு படைத்த பெருமையுடைய எம்பெருமானுக்குச் சொல்லுங்கள்*

### அடியார்களின் விரோதிகளை அழிக்கக் கூடியவன்

*திருமால் பத்து அவதாரங்கள் எடுத்துள்ளார் தனது அடியாருக்கு ஏதாவது துன்பம் வருமாயின் திருமால் பொறுத்துக்கொள்ள மாட்டார் உடனே அவதாரம் எடுத்து தன் பக்தனைக் காப்பாற்றி விடுவார் அவ்வாறு தன் பக்தன் பிரகலாதனைப் காப்பாற்ற நரசிம்மராக வந்தார் அது போல அடியாளாகிய என்னையும் காப்பாற்றுவார் என்ற*

*நம்பிக்கையில் வேங்கடவனை வேண்டுகிறார்*

***வான் கொண்டு கிளர்ந்து எழுந்த மாமுகில்காள்! வேங்கடத்துத்***
***தேன் கொண்ட மலர் சிதறத் திரண்டேறிப் பொழிவீர்காள்!***
***ஊன் கொண்ட வள்ளுகிரால் இரணியனை உடல் இடந்தான்***
***தான் கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே-581***

*திருவேங்கடமலையில் தேன் நிறைந்துள்ள புஷ்பங்கள் சிதறும்படி திரள்திரளாக ஆகாசத்திலேறி மழையைப் பொழியும், ஆகாசத்தை விழுங்கிக்கொண்டு ஓங்கிக் கிளம்பும் காளமேகங்களே சதையுடன் இருக்கும் கூர்மையான நகங்களாலே ஹிரண்யனுடைய உடலைப் பிளந்தெறிந்த எம்பெருமான் என்னிடத்திலிருந்து எடுத்துக்கொண்ட கைவளைகளைத் திருப்பிக்கொடுப்பானாகில் என் துயரத்தை வேங்கடவனிடம் சொல்லுங்கள்.*

**உலங்குண்ட விளங்கனி**

*என்னுடைய நன்மைகளைப் பறித்துக்கொண்ட நாராயணனிடம் என் நிலையைச் சொல் என்று மேகங்களிடம் பிரார்த்திக்கிறாள்.தன் நிலையை உலங்குண்ட விளங்கனி போல் உள் மெலிவதாக ஓர் அழகிய உவமை வாயிலாகவும் எடுத்துரைக்கிறார் ஆண்டாள் நாச்சியார் உலங்குஉண்ட விளங்கினியாவது விளாம்பழங்களுக்கு ஏற்படும் ஒருவித நோயால் பழத்தின் மேலோடு அப்படியே இருக்க அதன் உட்பகுதி முழுவதும் தின்னப்பட்டு வெறுங் கூடாகி விடுவது இதனை யானைத் தீ வேழம் உண்ட விளங்கனி என்று கூறுவர் அது போல ஆண்டாள் தன் உடல் கூடு போல் புறத்தேத் தோன்றினாலும் அகம் முழுவதும் எரிக்கப்பட்ட விட்டதாக கூறுகிறாள்*

***சலங்கொண்டு கிளர்ந்து எழுந்த தண் முகில்காள்! மாவலியை***
***நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள்!***
***உலங்குண்ட விளங்கனி போல் உள் மெலியப் புகுந்து என்னை***
***நலங்கொண்ட நாரணற்கு என் நடலை நோய் செப்புமினே-582***

*குளிர்ந்த நீரைப் பருகி ஆகாசத்தில் கிளம்பி நிற்கிற குளிர்ந்த மேகங்களே மஹாபலியிடமிருந்து பூமியை யாசித்துப் பெற்றுக்கொண்ட எம்பெருமான் நித்யவாஸம் செய்யும் திருவேங்கடமலையில் பரந்து ஏறிப்பொழிகின்ற மேகங்களே நான் பெரிய கொசுக்கள் உண்ட விளாம்பழம்போல் உள்மெலியும்படி என்னுள்ளே புகுந்து என்னுடைய நன்மைகளை அபகரித்த நாராயணனுக்கு எனது உயிர் இருக்கும் நிலையை அறிவியுங்கள்.*

**உயிர் தங்காது**

*வேங்கடவனை அணைத்தாலல்லது என் உயிர் தங்காது என்பதை அவனிடம் சென்று சொல்லுங்கள் என்று மேகங்களிடம் பிரார்த்திக்கிறாள்.*

***சங்கமா கடல் கடைந்தான் தண் முகில்காள்! வேங்கடத்துச்***
***செங்கண்மால் சேவடிக் கீழ் அடி வீழ்ச்சி விண்ணப்பம்***
***கொங்கை மேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒரு நாள்***
***தங்குமேல் என் ஆவி தங்கும் என்று உரையீரே-583***

*சங்குளைக் கொண்டதாயும் பெருமை வாய்ந்ததுமான கடலைக் கடைந்தருளின எம்பெருமான் நித்யவாஸம் செய்கிற திருவேங்கடமலையில் திரிகிற குளிர்ந்த மேகங்களே! சிவந்த கண்களையுடைய அவ்வெம்பெருமானுடைய சிவந்த திருவடிகளின் கீழே அடியேனுடைய விண்ணப்பம் என்னவென்றால் எனது முலைகளின் மேலே இருக்கும் குங்குமக் குழம்பானது நன்றாக அழிந்துபோகும் படி ஒருநாளாவது அவன் இங்கே வந்து என்னுடன் கூடுவானாகில் என்னுடைய உயிர் தங்கும். இதை எம்பெருமானிடம் சொல்லுங்கோள். உயிர் காக்க ஒரு நாளாவது என்னுடன் கூடிவிட்டு போகட்டும் என்கிறாள் ஆண்டாள் இப்படி ஒரு பெண் கேட்பாளா இதிலிருந்து ஆண்டாள் காதல் எவ்வளவு ஆழமானது என்பதனை இதன் வாயிலாக அறியலாம்.*

**பெண் கொலை பழிச்சொல் ஏற்படும்**

இன்னமும் என்னைச் சித்ரவதை செய்தால் உலகில் அவனுக்குப் பழிச்சொல் ஏற்படும் என்பதை அவனிடம் சொல்லுமாறு மேகங்களிடம் பிரார்த்திக்கிறாள்.

***மத யானை போல் எழுந்த மாமுகில்காள்! வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்! பாம்பணையான் வார்த்தை என்னே!***

***கதி என்றும் தான் ஆவான் கருதாது ஓர் பெண் கொடியை வதை செய்தான் என்னும் சொல் வையகத்தார் மதியாரே- 585***

திருவேங்கடமலையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்வை உடைத்தாயிருக்கும், மதயானை போலே செருக்கிக் கிளர்ந்திருக்கும் காளமேகங்களே ஆதிசேஷனில் சயனித்திருக்கும் எம்பெருமானுடைய வார்த்தையானது இப்படியே எம்பெருமான் என்னைக் கணிசிக்காமல் தொடர்ந்தான் என்றால் இந்த பூமியில் உள்ளோர்அந்த எம்பெருமான்எப்போதைக்கும் ரகனாயிருந்தும் தன் ஸ்வரூபத்துக்கு ஒரு குறை ஏற்படும் என்பதை நினைக்காமல் ஒரு பெண்பிள்ளையைக் கொன்றான் என்ற பழிச்சொல்லைச் சொல்லமாட்டார்களோ

ஒரு கொழு கொம்பிலே சேர்த்துப் படர விட வேண்டிய கொடியைத் தரையிலே விட்டு வைப்பது அதைக் கொலை செய்வதற்கு ஒப்பாகும் அது போலப் பருவம் வாய்ந்து பரிதவிக்கும் என்னைத் தன் மேல் படரவிடாமல் தரையில் வீச வதைப்பானாகில் இவனும் கொடியவன் அன்றோ அப்படிப் பெண் என்றும் பாராமல் வாட்டி வதைக்கும் ஒருவனை உலகத்தார் போற்றுவார்களோ என்று மிகவும் சினத்துடன் கேட்கிறாள் ஆண்டாள்

**நிறைவுரை**

அழகிய திருநெற்றியையும் திருமுகத்தையும் உடைவளாய் பகவானைக் குறைவற அனுபவிக்கும் பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாள் (நான்) திருவநந்தாழ்வானைப் படுக்கையாக உடைய திருவேங்கடமுடையானை ஆசைப்பட்டு அருளிச்செய்த மேக விடு தூதாக அமைந்த இத்தமிழ்ப் பாசுரங்களை ஹ்ருதயத்திலே வைத்துக் கொண்டு ஓதவல்லவர்கள் எம்பெருமானுக்கு நித்ய கைங்கர்யும் செய்யும் அடியவர்கள் ஆவார்கள். இறைவனிடத்தில் அடியார்கள் கொண்டுள்ள அன்பை நாயகன் நாயகி பாவத்தில் அமைத்துப் பாடிய அடியார் பலர். ஆனால் பெண்ணாகப் பிறந்து தன்னை இறைவனுக்கு நாயகியாக பாவித்து தமிழில் பாடிய முதல் பெண் புலவர் ஆண்டாள் பழங்கால இலக்கியங்களில் வேறு எவரும் இவ்வளவு ஆழமாக பாடவில்லை என்று கூறலாம் ஆண்டாள் கண்ணன் மீது கொண்ட காதலை வெளிப்படையாக பாடியுள்ளார் இறைவன் மீது கொண்ட அன்பும் ஆழ்ந்த காதலும் கொண்டு வாழ்ந்து கண்ணனை கணவனாக அடைய வேண்டும் என்று எண்ணி தன் எண்ணத்தில் உறுதியாக இருந்து கண்ணனை அடைந்து காட்டிய ஆண்டாளின் வாழ்க்கை இன்றைய பெண்களுக்கு ஒரு பாடமாகும் நாச்சியார் திருமொழி ஒரு பக்தி காவியமாக மேலோட்டமாக பார்க்காமல் ஆண்டாளின் உளப்பங்கை உளவியல் நோக்கில் விரிவாக ஆய்வு செய்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வது புத்திலக்கிய ஆய்வாளர்களின் கடமையாகும்.

**அடிக்குறிப்பு**


1. தொல்காப்பியர், தொல்காப்பியம், ஆசிரியக்குழு, 1981 இரண்டாம் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
2. திருவள்ளுவர், திருக்குறள், (உ.ஆ) பேரா. செந்தமிழ்ச் செழியன், 2015, சக்திபப்ளிஷிங் ஹவுஸ், பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை
3. முனைவர். நிர்மலா மோகன், 2014, ஞானபரம்பரை, மூன்றாம்பதிப்பு, வர்த்தமாணன் பதிப்பகம். இராமகிருஷ்ணாதெரு, தி.நகர், சென்னை
4. நாலாயிர திவ்விய பிரபந்தம், மூலமும் உரையும் (உ.ஆ) முனைவர் இரா.வ.கமலக்கண்ணன், முதற்பதிப்பு, 2011, வர்த்தமானன் பதிப்பகம், இராமகிருஷ்ணா தெரு, தி.நகர், சென்னை.